2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015 மற்றும் 2015–2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். இரண்டு அறிக்கைகளையும் நீங்களே அளித்துவிடலாம்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன்.*

2014–2015 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவினத்திற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2014–2015 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும், மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்திருக்கிறது. அவ்வாறே, 2014–2015 ஆம் ஆண்டில் 78.56 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

2014–2015 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, “பாசனம் (பொதுப் பணித் துறை)” “தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)” மற்றும் “நிதித் துறை” ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பணியாளரமைப்பு, இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் குறித்த சதவீதச் செலவுகள் மற்றும் பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் மீதான விழுக்காட்டுக்கேற்ப வட்டிச் செலவுகளால் கணக்குகளுக்கிடையே மாற்றங்கள் செய்யப்பட்டதால், “பாசனம் (பொதுப் பணித் துறை)” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

தேர்வு நிலை/சிறப்பு நிலைகளுக்கான பணப் பலன்கள் வழங்கியதாலும், காலிப் பணியிடங்களை நிரப்பியதாலும், ஊதியம் மற்றும் படிகள் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வினால் “தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)” மானியத்தின்கீழ் முதன்மையாக மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் குறித்த கணக்குகளில் தவறான வகைப்பிரிவு செய்ததால் “நிதித் துறை” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. எனவே, 2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
10	வணிக வரிகள் (வணிக மற்றும் பதிவுத் துறை)	..	..	5,03,400
16	நிதித் துறை	..	..	8,79,44,664
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	14,19,88,154	..	..

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	4,29,979	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	..	70,15,286	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	..	1,46,86,458	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	..	13,15,474	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	47,22,89,766	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	3,80,07,474	..	..
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	2,14,33,042	..
	பெருமொத்தம்	**65,27,15,373**	**4,44,50,260**	**8,84,48,064**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன்.

2015–2016 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ்

அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவினத்திற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2015–2016 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும், மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்திருக்கிறது. அவ்வாறே, 2015–2016 ஆம் ஆண்டில் 82.16 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

பிற்பகல் 1–50

2015–2016 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, “கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)” “தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)” மற்றும் “மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை” ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணியாளர் அமைப்பு, சாதனங்கள் மற்றும் தளவாடங்கள் போன்றவற்றிற்கான விழுக்காட்டிற்கேற்ற கட்டணங்கள், கணக்குகளுக்கிடையே மாற்றங்கள் செய்யப்பட்டதால் கட்டடங்கள், பொதுப் பணித் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் தவறான வகைப்பிரிவு செய்யப்பட்டதால் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்களைக் கட்டுதல், ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் பொதுப் பணித் துறையின் பணியாளரமைப்புகளுக்கான சதவிகிதச் செலவுகள் கணக்குகளுக்கிடையே மாற்றங்கள் செய்யப்பட்டதால், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டிருக்கிறது.

எனவே, 2015–2016 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2015–2016 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை	..	7,02,23,285	..
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	..	..	7,77,16,600
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	..	1,63,14,035	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	65,44,09,811	..
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	28,78,555	..	..
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	77,761	..
	பெருமொத்தம்	**28,78,555**	**74,10,24,892**	**7,77,16,600**